**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கரூர்</u>**

**முன்னிலை – திரு.எம்.சார்லஸ் ஆல்பர்ட், பி.காம்., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

**2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 10 ம் நாள் புதன்கிழமை**

**<u>குற்றவியல் பல்வகை மனு எண்.733/2026</u>**

**<u>குற்ற எண். 122/2026</u>**

**அரசுக்காக**

**காவல் ஆய்வாளர்,**

வெள்ளியணை காவல் நிலையம்,

**குற்ற எண்.122/2026** ....முறையீட்டாளர்/மனுதாரர்.

**– எதிர் –**

**1. சதீஷ்குமார்,**

த/பெ.சுப்பையா,

நெ.1/52 ராஜீவ்காந்தி நகர் 4 வது தெரு,

பாரதியார் நகர் மேற்கு,

சுத்தமல்லி,

திருநெல்வேலி மாவட்டம்.

**2. கொம்பையா,**

த/பெ.முருகன்,

நெ.75/86 JJ நகர்,

களக்காடு பிள்ளையார் கோவில் தெரு,

நாங்குநேரி,

திருநெல்வேலி மாவட்டம். ..... எதிர்மனுதாரர்கள்.

இக்குற்றப்பல்வகை மனுவான 09.06.2026 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பினுக்கு எடுக்கப்பட்டும், முறையீட்டாளர்/மனுதாரர் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் வெள்ளியணை காவல் ஆய்வாளர் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகளின் தரப்பில் எதிரிகள் தானாக ஆஜராகியும், நடத்திட இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் உத்தரவு பின்வரும்,

**<u>உத்தரவு</u>**

பி.என்.எஸ்.எஸ் பிரிவு 187(7) மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள் 2019 விதி 76–ன் கீழ் வெள்ளியணை காவல்நிலைய ஆய்வாளர் மேற்படி காவல் நிலைய குற்ற எண். 122/2026 u/s.127(2), 103(1), 305 BNS @ 127(2), 103(1), 305, 61(2), 48 BNS ன் கீழ் வழக்கில் தான் புலன் விசாரணை செய்து வருவதாகவும்,

மேற்படி விசாரணையில், புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் மேற்படி குற்ற எண்ணில் u/s. 127(2), 103(1), 305 BNS @ 127(2), 103(1), 305, 61(2), 48 BNS ன் படியாக வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரிகள் திருச்சி மத்திய சிறையில் நீதிமன்றகாவலில் இருந்து வருகிறார்கள். மேற்படி எதிரிகள் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்யவும், எதிரியிடமிருந்து வழக்கு தடயச் சொத்தை கைப்பற்றவும், உண்மை நிலையை கண்டறியவும் மேற்படி எதிரிகளை விசாரித்து புலன் விசாரணைக்கு தகவல் தர வேண்டியும், போலீஸ் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று தாக்கல் செய்த மனுவை பரிசீலனை செய்து இம்மனுவானது கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

2) எதிர்மனுதாரர்கள்/எதிரிகள் இன்று 10.06.2026ம் தேதி இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்கள். எதிரிகளுக்கு போலீஸ் காவலுக்கு உட்படுத்துவதற்கான நகல்கள் வழங்கப்பட்டது.

3) போலீஸ் விசாரணைக்கு செல்வது குறித்து, 1, 2 எதிரிகளிடம் வினவியபோது, எதிர்மனுதாரர்கள்/1, 2 எதிரிகள் தனக்கு போலீஸ் காவலில் செல்ல ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்துள்ளார்கள். 1, 2 எதிரிகள் காவல் துறையினருடன் விசாரணைக்கு செல்வதற்கு சம்மதித்து கையொப்பமிட்டார்.

4) மனுதாரரான வெள்ளியணை காவல் நிலைய காவல் ஆய்வாளர், மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்ட பிரமாணவாக்குமூலத்தில் கண்ட சங்கதிகளை எடுத்துரைத்தும் 1, 2 எதிரிகளை தன் வசம் விசாரணைக்கு ஒப்படைக்கும் பட்சத்தில் 1, 2 எதிரிகளின் மனதிற்கோ, உடலுக்கோ, எந்தவிதமான ஊறுவிளைக்கும் வகையில் செயல்படமாட்டேன் என்றும் போலீஸ் காவலுக்கு அனுமதிக்கும் காலத்தில் 1, 2 எதிரிகளுக்கு போதிய உணவு, உறைவிடம், மற்றும் மருத்துவ வசதி செய்து கொடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.

5) அரசு தரப்பில் முறையீட்டாளர்/மனுதாரர் தரப்பில் வெள்ளியணை காவல் நிலைய ஆய்வாளர் திரு.T.கணேசமூர்த்தி அவர்கள் ஆஜராகி, எதிரிகளின் மீது வெள்ளியணை காவல் நிலைய குற்ற எண்.122/2026 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது, எனவே இந்த 1, 2 எதிரிகளை காவல் துறை காவலில் எடுப்பதில் எந்தவித உள்நோக்கமும் இல்லை என்றும், காலதாமதப்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கமும் இல்லை என்றும், காவல் துறை காவலில் எதிரிகளை எடுத்து விசாரணை செய்வது அவசியம் என்றும், அது விசாரணையில் ஒரு பகுதியாகும் என்றும், இந்த மனு பாரதிய நாகரிக சுரக்ஷா சன்ஹிதா 2023 ல் குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே இம்மனு அனுமதிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என வாதிட்டார்.

6) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. காவல் துறை காவலில் எதிரிகளை எடுத்து விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்காதபட்சத்தில் சமூக பொருளாதாரம் பாதிப்பு சார்ந்த இந்த குற்ற வழக்கில் உண்மை விவரங்களை வெளிக்கொணர இயலாமல் போய்விடும். மேற்படி

வழக்கில் இந்த 1, 2 எதிரிகள் சம்மந்தப்பட்டுள்ளதாக தொடர் காவல் துறை விசாரணையில் தெரியவந்துள்ள நிலையில் அவர்கள் மீதான விசாரணை இவ்வழக்கின் புலனாய்வுக்கு அவசியமாகின்றது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், நீதியின் நலன் கருதி எதிரிகளை வெள்ளியணை காவல் நிலைய காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. காவல் ஆய்வாளர் அவர்கள் எதிரிகளை ஐந்து (05) நாட்கள் விசாரணைக்கு கொண்டு செல்ல வேண்டுமென்று கோரியுள்ளார். நீதியின் நலன் கருத்தில் கொண்டும் மூன்று (03) நாட்கள் மட்டும் கால அவகாசம் அளித்து, அதாவது 10.06.2026 இன்று மாலை 04.00 மணிக்கு ஒப்படைத்தும் மீண்டும் 13.06.2026 ம் தேதியன்று மாலை 04.00 மணிக்கு அல்லது அதற்கு முன்போ எதிரிகளை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டுமென்றும், இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது.

**அ** எதிர்மனுதாரர்கள்/ 1, 2 எதிரிகளை 10.06.2026 இன்று மாலை 04.00 மணிக்கு ஒப்படைத்தும் மீண்டும் 13.06.2026 ம் தேதியன்று மாலை 04.00 மணி வரை மூன்று (03) நாட்கள் மட்டும் போலீஸ் காவலுக்கு திரு.T.கணேசமூர்த்தி, வெள்ளியணை காவல் நிலைய, காவல் ஆய்வாளர் பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

**ஆ** திரு.T.கணேசமூர்த்தி, வெள்ளியணை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் எதிர்மனுதாரர்கள்/ 1, 2 எதிரிகளை தன் பொறுப்பில் வைத்திருக்கும்பொழுது, உணவு, உடை, மருத்துவ வசதி, சுகாதார வசதி ஆகியவற்றை செய்து தரவேண்டும்.

**இ** எதிர்மனுதாரர்கள்/ 1, 2 எதிரிகளை போலீசார் உடல் ரீதியாகவோ, மனரீதியாகவோ துன்புறுத்தக்கூடாது.

**ஈ** எதிர்மனுதாரர்கள்/ 1, 2 எதிரிகளை நல்ல நிலையில், வருகின்ற 13.06.2026 ம் தேதியன்று மாலை 04.00 மணிக்குள்ளாகவோ அல்லது இந்த 1, 2 எதிரிகளை பொறுத்து விசாரணை முடிவடைந்தவுடனோ வீண் காலதாமதமின்றி, இந்நீதிமன்றத்தில் உரிய மருத்துவ தகுதிச் சான்றுடன் ஆஜர்படுத்த வேண்டும்.

**உ** எதிர்மனுதாரர்கள்/ 1, 2 எதிரிகளை தேவையான மருத்துவ வசதியும் செய்து தரவேண்டும்.

**ஊ** போலீஸ் காவலில் எதிர்மனுதாரர்கள்/ 1, 2 எதிரிகள் இருக்கும் நேரத்தில் விசாரணை நேரம் தவிர எதிர்மனுதாரர்கள்/ 1, 2 எதிரிகள் அவர்களது வழக்கறிஞர்கள் அல்லது உறவினர்கள் சந்திக்கவும் அனுமதி வழங்கிட வேண்டும்.

இவ்வுத்திரவு இன்று 10.06.2026 ம் தேதி என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M CHARLES ALBERT

Digitally signed by M CHARLES ALBERT

**நீதித்துறை நடுவர் எண்.2**
**கரூர்**

**நகல்கள்**

1) மாண்புமிகு கரூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2) உயர்திரு.கண்காணிப்பாளர் அவர்கள், திருச்சி மத்திய சிறை.

3) காவல் ஆய்வாளர் அவர்கள், வெள்ளியணை காவல் நிலையம், கரூர் மாவட்டம்.

4) எதிரிகள்– 1)சதீஸ் குமார்
2) கொம்பையா